370

A



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பராங்குச பரகால
# எதிர்ராஜர் கீர்த்தனைகள்

திருவல்லிகேணி
அப்பனைய்யங்கார் குமாரத்தி
**வேதம்மாளால்**
இயற்றப்பட்டதை

—

**ஸ்ரீரங்கம்மாளால்**
முதலாவது பிரசுரம்
அச்சிடப்பட்டது
காப்பி ரையிட்டு
திருச்சி
லக்ஷ்மி விலாஸ பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.
1926-௵
இதன் விலை அணா 2

1

உ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ரெங்கநாதன் விஷயம்.

## 1-வது கட்டம்

### மாடப்புராகள்-மெட்டு.

1. தென்னரங்கேசனே பன்னகமீதிலே
இன்னம் துயில்வதென்னமோ ரெங்கேசா யின்
நின்னடி நாடிப் பொன்னடிதேடும்
என்னையருள் புரிகுவாய்.

2. பூங்காவேரிதனில் ஓங்கும் புளினத்தில்
தூங்குவதென்ன மாயமோ ரெங்கேசா தூங்
நாங்களடைந்தோம் பாங்காக
நித்திரை நீங்கி யருள்புரிகுவாய்.

3. பஞ்சனைபோலவே பாம்பணைமீதிலே
பள்ளி பயில்வதென்னமோ ரெங்கேசா பள்ளி
அஞ்சனவண்ணா தஞ்சமடைந்தேன்
கொஞ்சம் கருணை செய்குவாய்.

4. நச்சரவின் மேலே பச்சமலைபோலே
மெச்சிதுயில்வதென்னமோ ரெங்கேசா மெச்சி
நிச்சயமாக இச்சையாகி வந்தேன்
அச்சுதா கண் மலர்ந்திடாய்.

5. ஆதி ப்ரணவமாம் சோதி விமானத்தில்
நீ துயில்கொள்வதென்னமோ ரெங்கேசா நீது
பேதை யேன் நின்மேல் காதலாய் வந்தேன்
நாதனே ஆதரித்திடாய்.

6 நித்தியர்கள் ஸேவிக்க பக்த்தர்கள் பூஜிக்க
நித்திரை கொள்வதென்னமோ ரெங்கேசா நித்தி
கர்த்தனே என்மேல் சித்தமிரங்கி
சற்றே கருணை செய்குவாய்.

7. அண்டர் முனிவர்கள் கொண்டாடவந்து
கண்டுயில் கொள்வதென்னமோ ரெங்கேசா கண்.
கொண்டல்வண்ணனே தொண்டனேன் என்னை
கண்டு கருணை செய்குவாய்.

8. மெய்யான ஸிந்தன் செய்ய பாதத்திஞல்
வைய்ய மனந்தயிளேப்போ ரெங்கேசா வைய்ய
மெய்யனே என்னை ஐய்யமில்லாமல்
உய்ய அருள்புரிகுவாய்.

9. கானகம்தனிலே ஜானகி முன்னிலே
மானின்பின் சென்ற யிளேப்போ ரெங்கேசா மானின்
ஆனந்தமாகதானே கண்வளரும் கோனே
கருணை செய்குவாய்.

10. தேவர்கள் மகிழ ராவணுதிகளை
நோவ அடித்த பினேப்போ ரெங்கேசா நோவ
காவேரிதன்னிலே மேவி கண்வளரும்
தேவா கருணை செய்குவாய்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## நம்மாழ்வார் விஷயமான கீர்த்தனைகள்.

### 2-வது கட்டம்.

இராகம்-எதுகுலகாம்போதி-ஏமாடலாமுன

பல்லவி.

காரிநாயகி தன்னை கண்டேன் கனவினில்
கருத்தினில் ஆனந்தம் கொண்டேனே (கா)

அநுபல்லவி.

ஆரும் நிகரில்லா அன்னம்போலே நடையாள்
சீரான சிற்றிடை செம்பொன்னுடையிடையாள் (கா)

சரணங்கள்.

1. கமலமுகம் தன்னில் கருணைகுடிகொண்ட
கண்ணிணைகள் ரெண்டுகயலோ
விமலமாம் முடிமீதில் விரைகமழ் நீலம் போல்

விளங்கும் குழல்களும் புயலோ
அமல ஞானிபர்தம்மை அடிமைகொள்வது மிந்த
அர்ப்புத வடிவத்தின் அருமை திருச்செயலோ (கா)

2. மாலின்மேல் மாலாகிவண்ணம் பயலைபூத்த
வளரிலங்கொங்கைகள் மலையோ
பாலான மொழிகளால் பைங்கிளி பூவைக்கி
பயிற்றுவதும் நாலுகலையோ
சிலமில்லா சிருஞானியர் தங்களை
திருக்கரத்தால் திருத்திக்கொள்வதும் இல்லையோ (கா)

3-வது கட்டம்.

இராகம் நகுமாமோ மெட்டு.

பல்லவி.

மருமாமகிழ் மலர்சூடிய குருகாபுரியரசே
வரதாயக கவிநாயக மாதவ பதரூபா வரு

அநுபல்லவி.

திருமாலவனருள் மேவிய, அருமாதவ வடிவே
ஜெகமீதினிலே, பகவானடிசூடும்
திவ்ய போதரூபா (மரு)

சரணம்

பெருமாமறை தமிழேமொழி கருமாமுகிலுருவே
கருவாகிய குழிவாயொரு கதி ஏதுமிலடியேன்
திருமாமகள் ஞரை மாதவன் அடியே பெருங்காலம்
குருமாமணியே அருள்காரி குமரா
கோமளாங்க ரூபா (மரு)

4-வது கட்டம்.

இராகம்-வாமுலுஸகி மெட்டு

பல்லவி.

குருகுலதிலகா ச்ருதிதரங் குருகா நிலயா நாத (குரு)

அனுபல்லவி.

பரம க்ருபாகரஸாகு ஸ்ரீபக்த்த துரித பஞ்சஹரண (குரு)

சரணம்

ஜெனனமரண ஜெலபதி தாஸன் னுத ஜெனவிவிதகலுஷா
தரணநி புணஸாகு குணநிலய ஸஜ்ஜன வினுதசரணயுள,
சரணாகத பரிபாலன ஸாமகான லோல ப்ரியா
வரவகுள சுபவிபூஷீ மாயாமானுஷ மஞ்சுளவேஷா (குரு)

## 5-வது கட்டம்.

### இராகம் ராமமூகி ப்ரணபால மெட்டு.

1. காரிமாரர் வருவாரடி காக்ஷி நமக்கு தருவாரடி
பாரிலிணையில்லாரடி பக்தர்களுக்கு நல்லாரடி.

2. குருகை நகர் வாஸரடி கோடி ஸூர்ய தேஜரடி
திருமாலடிக்கு தாஸரடி சேதனர்க்கு நேசரடி.

3. ஸத்வகுண மூர்த்தியடி ஜெக ப்ரஸித்த கீர்த்தியடி
நித்யானந்த பூர்த்தியடி நிஜபதமும் நேர்த்தியடி.

4. நங்கை மகிழ் பாலனடி நன்மையளிக்கும் சீலனடி.
பங்கஜாஸன லோலரடி பக்தர்க்கனுகூலரடி.

5. திந்த்ரிணிமூல தாமரடி ஸ்ரீ சடகோபநாமரடி.
பந்தமொழிக்கும் நேமரடி பகவானடியில் காமரடி.

6. ஞானமுத்ரை கையரடி நம்புவோர்க்கு மெய்யரடி
வானோர் புகழ் துய்யரடி மலர்பதங்கள் செய்யரடி.

7. கருணைபொழியும் கண்ணரடி கருதுமடியர் எண்ணரடி
திருவாய்மொழி பண்ணரடி தேயஸ்பொலியும் வண்ணரடி.

8. பாலவடிவானோரடி வானவர்க்கு மேலோரடி
ஞாலம் திகழவந்தோரடி நல்ல அருள் தந்தோரடி.

9. ஞான குருநாதரடி நமக்கருளை செய்வாரடி.
மௌன வருது நீதரடி மொழியும் தமிழ் வேதரடி.

10. மொய்வகுளதாரரடி முக்தியளிக்கும் சீலரடி
தெய்வ நங்கை பாலரடி ஸித்தஸாகுமாரனடி.

## 6-வது கட்டம்.

### இராகம் பொன்னார்மேனியனே

1. திருவார் மேனியனே செம்பொன்னுடை அரைக்கசைத்து
மருவார் வண்துளவ மகிழ்மாலை யணிந்தவனே
குருகாநகர் பொலியும் எந்தன் கோலமணி விளக்கே
அரியேன் உன்னையல்லால் யினியாரையழைத்திடுவேன்.

2. கையாராழியுடை எந்தன் கண்ணபிரானே யென்று
நையா நெஞ்சுருகி முன்னம் ஞானியர் சென்றிரைஞ்ச
செய்யாா வகுளமலர் திருகுருகை நகர்பொலியும்
ஐயா உன்னையல்லாமல் இனியாரை யாரை அழைத்திடுவேன்

3. மறையார் தொல்புகழால் தொண்டர் வல்வினை தீர்த்துலகில்
பிரவா நெறியளிக்கும் பெருந்தேவனென பொலியும்
வெரியார் பொழில் குருகைமேவும் விண்ணவர்கோனே யெந்தன்
இறையே உன்னையல்லால் இனியாரை அழைத்திடுவேன்.

4. துஞ்சாமுனிவர் தொழும் உயர்சோதி சுடர்மணியே
எஞ்சாபிரவி யிடர் கடிந்தின்பம் தருமிறையே
மஞ்சார் பொழில் குருகை பொலி மாணிக்கமே யடியேன்
நெஞ்சால் உன்னையல்லால் இனியாரை அழைத்திடுவேன்.

5. சொல்வார் மறையினந்தத்திகழ் சோதி பரம்பொருளே
நல்லார் நவில் குருகை நகர் நாட்டிய கற்பகமே
பொல்லா வாக்கை வினைதன்னை போக்கி புகழளிக்கும்
வல்லா உன்னையல்லால் இனியாரை அழைத்திடுவேன்.

## 7-வது கட்டம். கண்ணிகள்.

1. ஜென்மவினை தீர்ந்தடியேன் தேவர்களும் தேடும்
திவ்யபதம் சேர்ந்திடவோர் திரமருளும் நாதா.

2. மன்னன் காரிமாரனுடைய மலரடிகள் பணிய
சின்மயமாய் பொன்னுலகில் திகழ்வதடி மாதே.

3. இகபரத்தை ஸுகமென்றெண்ணும் ஏழைமதியிருளை
அகல ஒரு மார்க்கமதை அருளும் எந்தன் நாதா.

4. ஜெகமதனில் மகிமைபெற்ற திந்திரிணிக்கீழ்தோன்றும்
பகலவன் தன்பதம்பணிய பரக்குமிருள் மாதே.

5. ஐம்புலனுக்கிரையளித்தே அல்லலினில் உழல்வேன்
துன்பமது துடைத்திடவோர் சூழ்ச்சிசொல்லும்நாதா.

6. எம்பெருமான் மகிழ்மாரன் இணையடிகள் போற்ற
வன்புடைய ஐம்புலன்கள் வாடுமடி மாதே.

7. மக்கள் மனை சுற்றவாழ்வில் வாஞ்சைசெய்யும் அடியேன்
அக்கவலைதீரும் வகை அருளும் எந்தன் நாதா.

8. சக்கரம் கொள்கையிநடி தாஸன் சடகோபன்
செக்கமலபாதம் பணிய தீருமடி தேநே.

9. ஆசாபாசப்பேய்தனை அண்டாமலே அதட்டி
ஈசனடி சேர்க்கும் மந்திரம் இயம்பும் எந்தன் நாதா.

10. தேசமெங்கும் புகழ்படைத்த ஸ்ரீ சடகோப மந்திரம்
பாசமதை அகற்றி உன்னை கேசவர்காளாக்கும்.

8-வது கட்டம்

இராகம் பல்லவி மெட்டு பாலனே

மாரனை காணுமலே மனதுமிகவாடுதே மகிழ்மாறனை

அனுபல்லவி.

1. லகியே நான் தாளே னினி தண்குருகை சென்னு
சேருவேன் (மகிழ்மாறனை)

2. பங்கயம்போல் கண்ணழகன் பாடுமுத்தமிழ் பண்ணழ
கன் (மகிழ்மாறனை)

3. கருணைமிகும் சீலனவன் காரிநங்கை பாலனவன் (மகிழ்மாறனை

4. வேதவிநோதநடி மேலவர்தொழும் பாதநடி (மகிழ்மாறனை)

திருவேங்கிடமுடையான் விஷயம்.

இராகம் வங்காரமார் மெட்டு. (திருப்புகழ்)

1. அம்பாகுபோலும் மொழி மாதர்ஸ—தர்கர் தலரென் றன்பாகியே
அவர்கள் மோகவலையூடு விரை அக்யானமேரி பொருளாசை
மிக மீரி யுரும் நசையாலே

2. அஞ்சாது சூது கொலை காமமெனும் தீமை பல நெஞ்சாறவே
புரியும் நீசனினதாணைதவிர் அம்பாவியேனை நம நாடடையும்
ஆளநென இகழாமல்.

3. வம்பாரும் மீனர்ஸகவாஸமது விட வினதன்பான பாகவதர்
பாதமலர் சூடவவர் வந்தோது நீதிமொழி காதிலுரநீதம்
வினதடிமேலே

4. மங்காத ஞானமது நீடவின காதலுர நந்தாதா பாடலுனமீது
விதமே புகல வண்டாடு மாமலர் நின்பாதமதில் சூட மதி
தரவேணும்

5. நம்பாவினேலமெனவே யமரர்வாடி மிக நொந்தார வாரமொடு
தானவர் செய்வாதை தன்னை நன்கோதியே துதிகள் கூர
வருளோடு மிருகரமீதே.

6. நந்தாழியோடு கதை வாளுமுயர் சாபமுர மந்தாரமாலை வன மாலை இருதோள் திகழ நண்பாகவே கருடன் மீதசுர நாசமுர வருவோனே.

7. கொம்பாரு தேனருவியோடிழியும் நீரருவி வந்தார மாமணி கள் வேகமுடனே சிதர குன்றுது வானளவு சேடகிரி மீதி லொரு முகில்போலே

8 கொண்டாடி வானவர்கள் மாமலர்கள் தூவநிதம் நின்னுவலேடோர் பணி சேதநர்கள் வாழவருள் கொங்காரு கோக நகை மாது மருமார்பசுரர் பெருமாளே.

## 9-வது கட்டம்.

### உதயராகம்-பூபாளம்

1. வகுளபூஷண வனஜலோசன மங்களாகரபாஹிமாம்
நிகிலஸஜ்ஜன வந்திதநிஜ மஞ்சுளபதபாஹிமாம்.

2. நாதயாமுனயதிவராதி ஸம் ஸேவித சரணுலய
வேதகித ஸுதாச்ருவந்தி முகாம்புஜ கருணுலய

3. சேஷரூபா சுபாகரவர திந்த்ரீணீ மூலவாஸினே
ஸ்ரீசதிவ்யபதாம்புஜா ச்ருததீரஹம்ஸ ஸ்வரூபிணே

4. ஸம்யவாதி மதப்ரபீடித ஸாதுஸஜ்ஜன போஷகா
குமதிகுஞ்சர பஞ்சகாங்குச ரூபபூத விதூஷகா.

5. மதுரகூஜித ப்ரமரஸவாஸித வனஜவகுள விபூஷணு
ப்ருதுல தீர்க்கித திவ்யபோத ஸ்ரூப நளின விலோசனு.

## 10-வது கட்டம்.

### இராகம்-பூபாள-மெட்டு

1. வகுளவிபூஷண வாரிஜலோசனு வரதிந்த்ரிணிவாஸா எழுந்திரும்
நிகிலகுருத்தமா நித்யானந்தரூபா நிர்மலமூர்த்தியே எழுந்திரும்

2. ஸ்ரீதாம்ரபர்ணியின் திவ்யதீர்த்தம்கொண்டு ஸ்ரீஸவஷ்ணவர்களும்கூடினர்
மாதா பிதாவாகும் வரகுணசீலனே மஞ்சனம் செய்யவே எழுந்திரும்.

3. ஆதிநாதருடைய பாதாரவிந்தத்தை ஆராதனம் செய்ய எழுந்திரும்.
ஆதுமில் காலத்து நான்முகன் தனைதந்த கோதில்குணம்பாட எழுந்திரும்.

4. பதிமராழ்வார்களும் பந்தி பந்தியாக பாதம் பணியவந்தார் எழுந்திரும்
யதிபதிவரயோகி யாமுனமுனிவரும் ஏகமாய் தொழவந்தார் எழுந்திரும்.

5. ஸஜ்ஜனஹ்ருதயமாம் ஸாரஸம்விகஸிக்க ஸஹஸ்ரகிரணம்போல் எழுந்திரும்
துர்ஜன கிருதயமாம் சோரர்கள் அஞ்சிட தூமகேதுபோல எழுந்திரும்.

6. அக்யானமாகிய அந்தகாரம் தன்னை அவனியில் நீக்கவே எழுந்திரும்.
விஜ்ஞானமூர்த்தயே வேததீபங்கொண்டு மேதினிவாழவே எழுந்திரும்.

7. பாக்யகு திர்ஷ்டியாம் பனியின் படலங்கள் பாரில்பரம்பிற்று எருந்திரும்
ஏகசக்ரரதம் ஏறும் கதிரவன்போல் எங்கும் துளங்கவே எழுந்திரும்.

8. பதிமர் செந்தமிழ்களும் பலகலை நூல்களும் பாரில் காணுது மறைந்திட
துதிசெயு நாதமுனிக்கு முன்சொல்லிய சோதி ஞானரூபா எழுந்திரும்.

9. கருவானகுழியினில் கருத்தழியும் தொண்டர் கவலையை நீக்க கருதியே
திருவிருத்தம் தனை செப்பியடிமைகொண்ட தேசிகரூபனே எழுந்திரும்.

10. ஈசனுகி யெல்லாவுலகுமளித்திடும் கேசவன் அடியினில் பாசமாய்
காசினிவாழவே ஆசிரியம் சொன்ன நேசனே நின்மலா எழுந்திரும்.

11. நந்தாநரகத்தழுந்தாமல் நாரணன் செந்தாமரை பாதம் சேரவே
அந்தாதி செப்பியனைவரும் வாழ்வித்த எந்தை சடகோபா எழுந்திரும்.

12. உருவாகி அருவாகி உளனுகி யிலனுகி உலகு படைத்துண்ட ஒருவனும்
மருவார் துழாய்முடி மாதவன் மகிழ்ந்திட திருவாய் மொழிபாட எழுந்திரும்

13. நாலானவேதத்தின் மேலான பொருள்தனை பாலான செந்தமிழ்பதிகமாய்
நீலார்துழாய்முடி நித்யன் தனைப்பாடும் கோலாகலா ஸ்வாமி எழுந்திரும்

14. கஸ்தூரிதிலகமும் கனகருண்டலமும் கரத்ருதவர ஞானமுத்ரையும்
விஸ்தாரமாகியே விளங்குநயனமும் மேவுபுன்முறுவலோடெழுந்திரும்.

15. காரிகுமாரனே கருணுகாரனே கல்யாணவேஷனே எழுந்திரும்
வாரிஜபாதனே வரகுருநாதனே மஞ்சுளபூஷனே எழுந்திரும்.

16. பங்கஜாஸனலோலா பக்த்தரக்ஷணசீலா இங்கித ஸுகுமாரா எழுந்திரும்
நங்கை வரபாலா நளின வகுளமாலா ஞான தேசிகதீரா எழுந்திரும்.

17. மதுரகவி புகல்பதிகம் தனைபாடி துதிசெய்யும் தொண்டர்கள்சூழ்ந்திட
கதியளித்தவர்களை கழலிணை சேர்ந்திட காக்ஷிகொடுக்கவே எழுந்திரும்.

## 11-வது கட்டம். பராங்குச கண்ணி.

1. நாய்போல் பிறந்துலகில் ஞானவகை ஏதுமின்றி
பேய்போலலையுகின்றேன் பேதை பராங்குசனே.

2. சான்றோர் பதம் பணியேன் தத்துவநூல் கேட்டறியேன்
ஈன்றோர்க்கு தவகில்லேன் ஏழை பராங்குசனே.

3. நொந்தார்க்கிரங்ககில்லேன் நவலுநன்றியாற்றகில்லேன்
வந்தார்க்கொன்றீந்தறியேன் வள்ளல் பராங்குசனே.

4. ஊன் உடல் பொருளில் யானெனதென்றெண்ணி
அபிமான மிகப்புரிவேன் வள்ளல் பராங்குசனே.

5. ஊழ்வினையால் நொந்தலுத்தேன் உறுமிருக்கண் தாங்ககில்லேன்
ஆழ்துயரம் போக்கி எனை ஆளாய் பராங்குசனே.

6 கறங்கு போல் சுற்றிமிக கவலையுறுங் கள்ள மனம்
திறம்பத்திருத்த மதி தேக்காய் பராங்குசனே.

7. வற்றாதோ பிறவிக்கடல் மாளாதோ வல்வினைகள்
தெற்றாதோ வின்பத்திடஞ் செப்பாய் பராங்குசனே.

8. தீராயோ வெவ்வினைகள் தீர்த்தடியேன் திவமடைய
சேராயோ தென்குருகை செல்வா பராங்குசனே.

9. பக்தியில்லா பழவினையேன் சித்தமதிலிருள்கெடவே
சுத்தஞானச்சுடர் விளக்கை தூண்டாய் பராங்குசனே.

10. பக்தர்களும் பாகவர்களும் பரவுகின்தன் பதமலரை
நித்தம்நினைத்திட மதியில் நிறுத்தாய் பராங்குசனே.

11. பேதைமதி யிருளை பேர்த்து பிறங்குதமிழ்
வேதமதன் பொருளை விளக்காய் பராங்குசனே.

## 12-வது கட்டம்.

## திருமங்கை ஆழ்வார் விஷயம்

இராகம்-வரடலகிதே மெட்டு.

பல்லவி.

காணவென்றால் கண்களாயிரம் வேணும் (கா)

அனுபல்லவி.

மேணி நித்ய ஸூரிகள் காணும் கலியனை (கா)

சரணங்கள்.

1. மங்கைக்குமுத மாதை மருங்கில் வைத்து அணைத்து
மத்தகெஜத்தின் மீதில் மன்னனெழுந்தருளி
மங்களமாய் மாலைமாத்தி மகிழ்வுடனே
மதிப்புடனே பள்ளியறையில் ஏறுவதை (காண)

2. ஏழாம் உத்ஸவம் தன்னில் ஏத்தமதாய் பல்லக்கில்
எழிலுடை மங்கை கோலம்கொண்டு எழுந்தருளும்
வாழ்வதை வர்ணித்திட மதியிலேனல்தரமா
வனஜமுதித்த அயன் வருணித்திட வருமோ (காண)

3. ஸொந்த ஆடல் மாதனில் விந்தையுடனே வறி
ஸௌந்தரியாம் குமுதம் ஜோதியாம் ப்ரபைதனில்
வந்திடும் கலியனை முந்தி பணிந்த பேர்கள்
பந்தவினைகள் தானே பரந்துபோகுமடியை (காண)

4. பரபக்ததி பரக்ஞான பரம பக்த்திகள் விஞ்சும்
பாவனையுடனாக பதிந்தநிலையழகும்
கரமதில் அஞ்சலியும் கையிலணைத்தவேலும்
கண்ணனரங்கம் காண பேர்த்தகழலடியை (காண)

5. மானுரைத்திடு மந்த்ரம் மகிழ்வுடனே கேட்க்க
வாஞ்சையதாகவே தாழ்த்த வலச்செவியும்
சீலமில்லா சிறுஞானியர் தங்களை
திருததி உய்ய அளிக்கும் சீருடைய அடியை (காண)

## 13-வது கட்டம்

இராகம் ராஜாதிகாபஜேஸாம் மெட்டு.

உடயவர் விஷயம். பல்லவி.

1. ஆசூரி கேசவகுமார அமலதேஜனே
பூஜனீய தேசிகேந்திரபாஹு புண்யவேஷனே. (ஆசூரி

2. ஸ்ரீரங்கராஜ வைபவ பரகாச லோலனே
சங்கராதிகு மதிஸங்க பங்கஜ சதுரசிலனே (ஆசூரி)

3. ஸ்ரீகாஞ்சி தேவராஜ திவ்ய கருணைபாத்ரனே
வாஞ்சித வரதீர்த்தபாஹுமகநீயகாத்ரனே (ஆசூரி)

## 14-வது கட்டம்.

இராகம்-மஜதாரி-மெட்டு.

பல்லவி.

எதிராஜா பணிசா குருசேகரா

அனுபல்லவி.

1. ச்ருதினி ஜார்த்த ப்ரதஸூகோ ஷாத்ருதண்டபூஷித ஸ்ரீகரவேஷா
தீனபோஷா பாஹிமாம் ஓ தீனபோஷா பாஹிமாம் (எதிராஜ)

2. ரெங்கேச வைபவ ரஞ்சித சீலா ரமணிய ஸ்ரீபதி ஸித்தாந்தலோல
ராமானுஜா பாஹிமாம் ஓ ராமானுஜா பாஹிமாம் (எதிராஜ)

3. குணகண ஸந்தர்சித ரூபா குமதி குஞ்சர கண்டீரவாவோ
குருகுலேச பாஹிமாம் ஓ குருகுலேச பாஹிமாம். (எதிராஜ)

## 15-வது கட்டம்.

### இராகம் மகமதியர் குலத்தில் மெட்டு.

பல்லவி.

1. ஆசூரி கேசவன் தன் அருமை ஸூதனாய் வந்து அவனியுதித்த ராஜனே அடியேனுடை அகயிருள் நீக்கும் தேஜனே அகல மதங்களை விகல அடித்திட பகலவன்போலவே சுகமுடனே இந்த பாரில் உதித்தராஜனே பாவியேனுடை பழவினை தீர் எதிராஜனே.

2. கோட்டியூர் நம்பியிடம் வாட்டமின்னி பதினெண் வாட்டிநடந்த சீலனே அவர் மந்திரம் கேட்டு மகிழ்ந்த ஜாலனே நாட்டில் ஜெனர்களின் கேட்டை விலக்கிட தாட்டிகமாய் திருகோட்டி விமானத்தில் கூட்டு உரைத்த நாதனே நம்பி மகிழ்ந்து கொண்டாடி போற்றும் போதனே.

## 16 வது கட்டம்.

### இராகம்-ஆரோஸைய மெட்டு.

பல்லவி.

இதுவே நல்ல சமயம் எதிசேகரா காருமே.

அநுபல்லவி.

இதுவே நல்ல சமயம். எதிசேகராகாருமே.

1. புதுமை சேர் எதுகிரி வாழ புத்ரசமணர் நீங்க புவியில்
வேதாந்தம் தேங்க புகழும் வைஷ்ணவம் ஓங்க பூரணனும்
காரணனும் சிரடயகாரணனே (இதுவே)

சரணம்

2. பந்த பவவினையால் வாடி பாரெங்கெங்கிலும் தேடி
பரமனின் புகழ்பாடி பணிந்தேன் நான் ஆவல் கூடி
பவஹரனே சுபகரனே குருபரனே கருணைசெய் (இதுவே)

## 17-வது கட்டம்

## இராகம் அஷ்டபதி வதஸியதி மெட்டு.

1. உம்பர் முனிவோர் புகழும் சம்பகவனந்தனில் அன்புடனே
வாழும் எந்தன் தாயே நம்பிவந்த தொண்டனே இன்பமுடன்
ஆளுவாய் செம்பகேசன் மருவும் ராணி ப்ரியே
தானசீலே ப்ரியே தானசீலே.

2. அன்னைதந்தையா னரியேன் உன்னி நெஞ்சிலும் குரியேன்
முன்னைவினையாலே நொந்தேன் தாயே என்னை இனியாண்டிட
உன்னையன்றி ஆர்துணை மன்னன் கோபாலன்மகிழ்
ராணி ப்ரியே தானசீலே.

3 பந்தவினையால் வருந்தி சிந்தைமிகவே கலங்கி நொந்திடும்
அடியேன் மீதில்தாயே சிந்தைமிக இரங்கியே வந்து
வினைபோக்குவாய் நந்தகோபாலன் மகிழ் ராணி
ப்ரியே தானசீலே.

## 18-வது கட்டம். மங்களம்.

1. மங்களங்கள் பாடுவோம் நாம் மங்கைமார்களே மகிழ்வாய் ரங்க
நாயகி அணையும் பங்கயகண்ணனடிதன்னை பரிவாய் மங்களங்கள்.
2. காரிகுல கண்மணியை கருத்தில் நினைந்து மகிழ்வு மீரிடவே வேத
னைகன் ஆரிடவே மாரனடிக்கே மகிழ்வாய் மங்களங்கள்.
3. ஆலிநாட்டில் அன்பதாக அரசுபுரியும் கலியன் கோலமான
பொன்னடிக்கே ஞாலம்வாழ கோலாகாலமாய் குதித்து மங்களங்கள்
4. பூதபுரிமேவும் எதிராஜனடியை மனதில் போதமுடன்
போற்றிசெய்து எற்றமாக சாற்றியுரைப்பாய் மனதே மங்களங்கள்

சுபம்! சுபம்!! சுபம்!!!

பராங்குச பரகால எதிராஜர் கீர்த்தனைகள் முற்றிற்று.

இந்த புஸ்தகம் வேண்டியவர்கள், ஸ்ரீரங்கம் வடக்கு சித்திரைவிதி, 1194 நெம்பர் வீட்டிலும், ரங்கவிலாஸம் கன்னையா படக்கடையிலும் கிடைக்கும்.

வி. பி. மூலமாயும் எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

# விளம்பரம்.

## வேதம்மாளால் இயற்றிய புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| நூற்றெட்டு திருப்பதி கீர்த்தனை புஸ்தகம் 1-க்கு | ரூ. 0—12—0. |
| ஸத்ஸம்பிரதாய பஜனைப்பத்ததி | ரூ. 0—6—0 |
| திருமங்கை ஆழ்வார் சரித்திர கும்மி 1-க்கு | ரூ. 0—4—0. |
| உஷா கல்யாணக் கும்மி 1-க்கு | ரூ. 0—4—0. |
| ஸ்ரீவரமங்கை கல்யாணக் கும்மி 1-க்கு | ரூ. 0—4—0. |
| அத்திகிரி மகாத்மியக்கும்மி 1க்கு | ரூ. 0—1—6. |
| பராங்குச பரகால எதிராஜர் கீர்த்தனை 1-க்கு | ரூ. 0—2—0. |